அன்புக்கு அர்த்தமே அண்ணா நீ அன்னைக்கு நிகரே அண்ணா
எங்கள் தேசமே உங்கள் வாழ்வினைக் கொண்ட அண்ணா
வீசிடும் அலையின் வீச்சிலே எங்கள் தலைவர் அண்ணா மூச்சிலே 2
நாம் வெல்லுவோம் கடல் ஆழுவோம் தமிழீழமே 2

அன்புக்கு அர்த்தமே அண்ணா நீ அன்னைக்கு நிகரே அண்ணா

சோறுட்டும் போதிலும் தேசஉணர்வூட்டினாய்
தோழில் என்னை காவி நீ தோழர் வீரம் கூறினாய்
அலைமோதும் மணல் தரையில் நீ வரைந்து காட்டியது 2
அன்னை தமிழீழம் அந்த எங்கள் சொந்த தாயகமே
தேசத்தில் வைத்த பாசத்தை எண்ணி பாடுறேன்

அன்புக்கு அர்த்தமே அண்ணா நீ அன்னைக்கு நிகரே அண்ணா

மார்பு தட்டி நாங்கள் எல்லாம் தமிழர் என்று சீறினாய்
தேசநலன் ஒன்றே எங்கள் வாழ்கை என்று கூறினாய்
விடுதலை உணர்வினீலே அறிவு கொண்ட அறிவரசன் 2
தினம் எந்தன் நினைவினிலே உணர்வூட்டும் அண்ணனவன்
போன கடலின் திசையை பார்த்து அழுகிறேன்

அன்புக்கு அர்த்தமே அண்ணா நீ அன்னைக்கு நிகரே அண்ணா

கடலலை விடுதலைக்காய் உன்னையே நீ அழித்தாய்
தரையிறக்க வந்தபகையை மோதியே நீயழித்தாய்
விசைப்படகை சிதறடித்து அதன் கதை நீமுடித்தாய் 2
கிழாலி ஏரியிலே கரும்புலியாய் வெடித்தாய்
பாதையில் என் பாதங்கள் நடைபோடுதே

அன்புக்கு அர்த்தமே அண்ணா நீ அன்னைக்கு நிகரே அண்ணா
எங்கள் தேசமே உங்கள் வாழ்வினைக் கொண்ட அண்ணா
வீசிடும் அலையின் வீச்சிலே எங்கள் தலைவர் அண்ணா மூச்சிலே 2
நாம் வெல்லுவோம் கடல் ஆழுவோம் தமிழீழமே 2

அன்புக்கு அர்த்தமே அண்ணா நீ அன்னைக்கு நிகரே அண்ணா